**கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதரணக் கூட்டம்– 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

**முன்னிலை: திரு.S.ரவிச்சந்திரன் பி.ஏ., ஆணையர் மற்றும் தனி அலுவலர்.**

பொருள் எண். 1

கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் 23.11.2021 முதல் 30.11.2021 ம் தேதி வரை உள்ள நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1888 /2020/சி1)**

**தீர்மான எண். 654**

பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண். 2

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.105, நாள்.02.04.2018 நகர்மன்ற தீர்மானம் எண்.179 நாள்.27.06.2019 மற்றும் தீர்மானம் எண்.267/ நாள்.31.10.2019ன்படி இந்நகராட்சி வாரச்சந்தையிலுள்ள கடை எண்.53ஐ திரு.என்.என்.கமர்தீன் 74/6, ரஹ்மானியாபுரம் 3ம் தெரு, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் என்பவருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கிய உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் அன்னாருக்கு 2020–21ம் ஆண்டுக்கான வாடகைத் தொகை ரூ.12480/–ஐ செலுத்தக் கேட்டு இவ்வலுவலக அறிவிப்புக் கடித ந.க.எண்.1399/2013/அ3 நாள்.21.12.2020, 19.02.2021 மற்றும் 09.04.2021 ஆகிய தினங்களில் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் இதுநாள் வரையிலும் மேற்கண்ட தொகையினை செலுத்த முன்வரவில்லை. எனவே மேற்கண்ட தொகையினை அன்னார் செலுத்தியுள்ள வாடகைத் டெபாசிட் தொகை ரூ.4990/– நாள்.07.07.2015 மற்றும் ரூ.5000/– நாள்.24.09.2018 ஆக மொத்தம் ரூ.9990/–ஐ ஈடுசெய்து மீதத்தொகை ரூ.2490/–ஐ அன்னாரிடமிருந்து வசூல் செய்யவும், மேற்கண்ட கடையின் உரிமத்தினை 31.032021 உடன் ரத்து செய்து மறு ஏலம்விடவும், தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் ஏல நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1399/2013/அ3)**

**தீர்மான எண். 655**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 3

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.105, நாள்.02.04.2018 நகர்மன்ற தீர்மானம் எண்.267 நாள்.31.10.2019 மற்றும் தீர்மானம் எண்.129 நாள்.27.06.2019ன்படி இந்நகராட்சி தந்தை பெரியார் வாரச்சந்தையிலுள்ள கடை எண்.46ஐ திரு.P.S.பழனிச்சாமி, த/பெ.சண்முகவேல் படையாச்சி, வடக்கு விளைத் தெரு, முத்துக்கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் என்பவருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அன்னாரின் 31.03.2021ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட கடையினை தொடர்ந்து நடத்த இயலாத நிலையில் இருப்பதால் 2020–21ம் ஆண்டுக்கான குத்தகை தொகை ரூ.10650+GST/1917 ஆகமொத்தம் ரூ.12567/– அன்னார் மேற்கண்ட கடைக்காக 07.07.2015ல் செலுத்தப்பட்ட தொகை ரூ.20000/– மற்றும் 23.04.2018ல் செலுத்தப்பட்ட தொகை ரூ.5000/– சேர்த்து ஆகமொத்தம் ரூ.25000/–ல் ரூ.12567/–ஐ ஈடுசெய்து மீதத்தொகை ரூ.12433/–ஐ திரும்ப வழங்கவும் 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு மறு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட கடைக்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1399/2013/அ3)**

**தீர்மான எண். 656**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 4

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.287, நாள்.19.11.2018 மற்றும் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண். 3421/2018/அ3 நாள்.03.12.2018ன்படி இந்நகராட்சி பேரூந்து நிலையத்தின் தெற்கு பக்கம் நுழைவுவாயில் அருகில் உள்ள காலியிடத்தினை திரு.ஸ்ரீராம் சரவணன், S/o. சுடலைமுத்து, 12 விவேகானந்தர் 3ம் தெரு, தென்காசி என்பவருக்கு 03.12.2018 முதல் 30.11.2019 வரை உரிமம் வழங்கப்பட்டது. மேலும் அன்னாரின்கோரிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட உரிமத்தினை இந்நகர்மன்ற தீர்மான எண்.262 நாள்.31.10.2019ன் படி 01.12.2019 முதல் 30.11.2021 வரை உரிமம் புதுபிக்கப்ட்டுள்ளது. மேலும் அன்னாரின் 20.12.2021ம் தேதிய மனுவில் மேற்கண்ட காலியிடத்தில் தொழில் நடத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட உரிமத்தினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட காலியிடத்தின் உரிமத்தினை 31.12.2021 உடன் ரத்து செய்து மறு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், 31.03.2021 வரை அன்னார் செலுத்தியுள்ள டெபாசிட் தொகை ரூ.100000/– நாள்.24.06.2019 மற்றும் ரூ.46000/–ல் நாள்.20.11.2019 ஆக மொத்தம் ரூ.146000/–ல் 2021–22ம் (மார்ச்–2022 வரை) ஆண்டுக்கான வாடகை ரூ.52038/–ஐ ஈடுசெய்து தணிக்கைக்காக ரூ.10000/– நிறுத்தம் செய்து மீதத்தொகை ரூ.83962/–ஐ திரும்ப வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.3421/2018/அ3)**

**தீர்மான எண். 657**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 5

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.53, நாள்.25.01.2007ன்படி இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள கடை எண்.7க்கு திரு.அப்துல் ரஹீம், S/o.மைதீன் பிச்சை, 3,புதுமனை தெற்கு தெரு, கடையநல்லூர் என்பவருக்கு 31.07.2017 உடன் 9 ஆண்டுகள் முடிவடைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அன்னாரின் கோரிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட கடைக்கு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.5640/2016/அ3 நாள்.14.07.2017 மற்றும் இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.173 நாள்.24.04.2017ன்படி 01.04.2017 முதல் 31.03.2020 வரை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மானம் எண்.79 நாள்.30.04.2020 மற்றும் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண். 5640/2016/அ3 நாள்.15.06.2020ன்படி அன்னாருக்கு 01.04.2020 முதல் 31.03.2023 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அன்னாரின் 16.12.2021ம் தேதிய மனுவில் கொரோனா ஊரடங்கு காரணமாக அன்னார் நடத்தி வந்த டிராவல்ஸ் தொழில் பாதிப்படைந்து கடை தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால் வருமானம் இல்லாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு மேற்கண்ட கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்து அன்னாரின் உரிமத்தினை ரத்து செய்ய கோரியுள்ளார். அன்னாரின் கோரிக்கை மீது வருவாய் ஆய்வரின் அறிக்கை பெறப்பட்டது. எனவே மேற்கண்ட கடையின் உரிமத்தினை 31.03.2022 உடன் ரத்து செய்து மறு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அன்னார் மேற்கண்ட கடைக்கு 15.05.2006ல் செலுத்தப்பட்ட வைப்புத்தொகை ரூ.16560/– 02.05.2008ல் செலுத்தப்பட்ட தொகை ரூ.7725/– 02.05.2008ல் செலுத்தப்பட்ட தொகை ரூ.40000/– மற்றும் 05.06.2017ல் செலுத்தப்பட்ட தொகை ரூ.49875/– ஆகமொத்தம் ரூ.114160/–ல் 2021–22ம் ஆண்டுக்கு மேற்கண்ட கடைக்கு நிலுவையிலுள்ள வாடகை தொகை ரூ.67252/–ஐ ஈடு செய்து மீதத்தொகை ரூ.46908/–ல் தணிக்கைக்காக ரூ.5000/– நிறுத்தம் செய்து மீதத்தொகை ரூ.41908/–ஐ அன்னாருக்கு திரும்ப வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.5904/2021/அ3)**

**தீர்மான எண். 658**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333, நாள்.30/12/2020ன்படி இந்நகராட்சி குத்தகை இனம் பேரறிஞர் அண்ணா தினசரி சந்தை மற்றும் தந்தை பெரியார் வாரச்சந்தையில் தினந்தோறும் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமங்கள் இரண்டையும் சேர்த்து 01.04.2021 முதல் 31.032024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட ரூ.900000/– ஒன்பது லட்சம் ஏல முன் வைப்புத்தொகை நிர்ணயம் செய்து ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து 6 தடவைகள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும் கொரோனா தொற்றுநோய் பரவலால் தினசரிசந்தை மே–2021, ஜீன்–2021 ஆகிய மாதங்களில் அடைக்கப்பட்டதால் மேற்கண்ட குத்தகை இனங்களை யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. மேலும் வைப்புத்தொகையினை குறைவு செய்தால் ஏலம் எடுக்க முன் வருகிறோம் என்ற வியாபாரிகளின் கோரிக்கையின் அடிப்படையில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.534 நாள்.23.07.2021ன்படி ஏல முன் வைப்புத்தொகை ரூ.900000/– என்பதை ரூ.600000/–ஆக குறைவு செய்து ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 13.08.2021, 03.09.2021, 23.09.2021, 16.12.2021 மற்றும் 31.12.2021 ஆகிய 5 தினங்களில் மொத்தம் 11 முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவ் ஏலங்களிலும் மேற்கண்ட குத்தகை இனத்தினை ஏலம் எடுக்க முன் வரவில்லை. மேலும் வியாபாரிகளின் கோரிக்கையின் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 31.12.2021ம் தேதிய தொலைபேசி செய்தியில் மேற்கண்ட குத்தகை இனங்கள் இரண்டையும் ஏல முன் வைப்புத்தொகை தனித்தனியாக நிர்ணயம் செய்து தனித்தனியாக ஏலம் விட அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக வருவாய் ஆய்வர் தமது 31.12.2021ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதன்படி மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கீழ்க்கண்டவாறு ஏல முன் வைப்புத்தொகை நிர்ணயம் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| 1. | பேரறிஞர் அண்ணா தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.500000/– |
| 2. | தந்தை பெரியார் வாரச்சந்தையில் தினந்தோறும் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.100000/– |

மேற்கண்டவாறு ஏல முன்வைப்புத் தொகை நிர்ணயம் செய்யவும், மேற்கண்ட குத்தகை இனத்தினை தனித்தனியாக ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 659**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 7**

இந்நகராட்சியில் வருவாய் வரத்தக்க குத்தகை இனம் நகராட்சி பேரூந்து நிலையத்திலுள்ள கீழ்க்கண்ட கடைகளுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்க 31.12.2021 அன்று 11வது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| கடை எண் | பெயர் / முகவரி | டெபாசிட் செலுத்திய விபரம் | மாத வாடகை ஏலக் கேள்வி |
|---|---|---|---|
| 15 | 1. S.கார்த்திக்,<br>S/o.சுப்பையா,<br>13/3 ஆதி திராவிடர் தெற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.50000/–<br>DD No.633890<br>27.12.2021 | ரூ.1900/– |
| | 2. S.சண்முகம்,<br>S/o.சாமிக்கண்ணு,<br>6C41C1 இந்திரா நகர் புதுக்காலனி, | ரூ.25000/–<br>DD No.633881<br>15.12.2021<br>ரூ.25000/– | ரூ.2000/– |

| | | | |
|---|---|---|---|
| | மேலக்கடையநல்லூர் | DD No.633880<br>15.12.2021 | |
| 16 | 1. S.கார்த்திக்,<br>S/o.சுப்பையா,<br>13 ஆதி திராவிடர் தெற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர்.<br><br>2. S.சண்முகம்,<br>S/o.சாமிக்கண்ணு,<br>6C41C1 இந்திரா நகர் புதுக்காலனி,<br>மேலக்கடையநல்லூர் | ரூ.25000/–<br>DD No.053740<br>20.12.2021<br>ரூ.25000/–<br>DD No.053741<br>20.12.2021<br><br>ரூ.50000/–<br>DD No.633891<br>27.12.2021<br>CUB பேங்க்<br>கடையநல்லூர் | ரூ.1950/–<br><br><br><br><br><br><br><br>ரூ.2050/– |

மேற்கண்ட கடை எண்.15 க்கு வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள திரு.சண்முகம் என்பவரால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி கூடுதலாக உள்ளது. மேலும் மேற்கண்ட கடைக்கு 2016–17 முதல் ஏலம் கோரப்பட்டது. 16.12.2021 வரையிலும் ஏலம் கோர முன் வராத நிலையில் மேற்காணும் வரிசை எண்.2ல் குறிப்பிட்ட திரு.சண்முகம் என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியினை முடிவு செய்து அன்னாருக்கு 01.02.2022 முதல் 31.01.2025வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழுங்கவும், மேலும் மேற்கண்ட கடை எண்.16க்கு 2019–20 ஆண்டு முதல் 16.12.2021 வரையிலும் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் இக்கடைக்கு வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள திரு.சண்முகம் என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கூடுதலாக உள்ளது. எனவே அன்னாரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியினை முடிவு செய்து திரு.சண்முகம் என்பவருக்கு 01.02.2022 முதல் 31.01.2025 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட இரண்டு கடைகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 660**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 8**

இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள அம்மா உணவகத்தில் உள்ள மிக்ஸி, பிரிட்ஜ் மற்றும் குடிநீர் பைப் ஆகியவற்றில் பழுது நீக்கத்திற்கு ஆன செலவினத்தொகை ரூ.1650/–ஐ சம்மந்தப்பட்ட அம்மா உணவகப் பணியாளர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 5269 /2021/சி1)**

**தீர்மான எண். 661**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 9**

கடையநல்லூர் நகராட்சிப்பகுதியில் நகராட்சி பராமரிப்பின் கீழ் 13 எண்ணம் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் தலைமை நீரேற்று நிலையங்களில் 3 எண்ணம் தரைமட்ட நீர்சேகரிப்பு தொட்டிகள் இயங்கி வருகிறது. இந்நிலையில் மேற்காணும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கதொட்டிகள் மூலம் தினமும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகின்றது. ஆகவே குடிநீர் சேகரிப்பு தொட்டிகளை மாதம் இருமுறை அல்லது தேவைக்கேற்ப சுத்தம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் இப்பணிகளை மேற்கொள்ள நகராட்சியில் போதிய வேலைப்பளுபணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான ஒராண்டிற்குரிய உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5,40,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 5937 /2021/இ1)**

**தீர்மான எண். 662**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 10**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில், பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு உபகரணங்கள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், கீழ்க்காணும் பொருட்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)த்தினை மேற்கொள்ளவும் மன்றத்தின் முன்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | லைசால் | 100 லி. |
| 2. | சானிடைசர் | 10 லி. |
| 3. | Digital Thermometer | 35 எண்ணம் |
| 4. | கைகழுவும் திரவம் | 100 லி. |
| 5. | Pulse Oximeter | 35 எண்ணம் |
| 6. | ஃபேஸ் ஷீல்டு | 500 எண்ணம் |
| 7. | ரப்பர் கையுறை | 500 எண்ணம் |
| 8. | ரப்பர் கையுறை (ஒருமுறை பயன்படுத்துவது) | 2500 எண்ணம் |
| 9. | PPE Kit Full fled (Coat, Gloves, Mask, Cap) | 200 எண்ணம் |
| 10. | சர்ஜிகல் மாஸ்க் 3 ply | 10000 எண்ணம் |
| 11. | சிந்தடிக் கைஉறை | 500 எண்ணம் |
| 12. | Face Mask - N 95 | 100 எண்ணம் |

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 60642021/எச்1)**

**தீர்மான எண். 663**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 11**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில், பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு உபகரணங்கள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், கீழ்க்காணும் பொருட்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.6,00,000/- (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)த்தினை மேற்கொள்ளவும் மன்றத்தின் முன்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

## டெங்கு தடுப்பு உபகரணங்கள்

| | | |
|---|---|---|
| 1. | பேசில்லஸ் துரின்ஜியன்ஸிஸ் (BT) | 150 கி. |
| 2. | பைரித்திரம் | 200 லி. |
| 3. | டெமிபாஸ் | 200 லி. |

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 6063 /2021/எச்1)**

**தீர்மான எண். 664**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 12**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில், பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், கீழ்க்காணும் பொருட்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்)த்தினை மேற்கொள்ளவும் மன்றத்தின் முன்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் தேவைப்படும் பொருட்கள் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | மழைகோட்டு | 100 எண்ணம் |
| 2. | Reflecter Jocket | 90 எண்ணம் |
| 3. | கம்பூட் | 90 எண்ணம் |
| 4. | வெள்ளை பினாயில் | 100 லி. |
| 5. | கருப்பு பினாயில் | 100 லி. |
| 6. | டாய்லெட் கிளினிங் ஆசிட் | 50 லி. |
| 7. | ஸ்பிரேயர் (12lt. Capacity) | 7 எண்ணம் |
| 8. | செருப்பு | 90 எண்ணம் |
| 9. | தென்னை ஈக்கிமாறு | 100 எண்ணம் |
| 10. | மூங்கில் தூப்புமாறு | 100 எண்ணம் |
| 11. | முள்கரண்டி கைப்பிடியுடன் கூடியது சிறியது | 100 எண்ணம் |
| 12. | முள்கரண்டி கைப்பிடியுடன் கூடியது பெரியது | 50 எண்ணம் |
| 13. | குப்பை அகற்றும் தகடுகள் | 90 எண்ணம் |
| 14. | மண்வெட்டி | 50 எண்ணம் |
| 15. | தொப்பி (நைலான்) | 50 எண்ணம் |

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 6062 /2021/எச்1)**

**தீர்மான எண். 665**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 13**

கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட **1** முதல் **33** வார்டுகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் பெரியாற்று படுகை, கல்லாறு, பெரிய நாயகம் கோவில், இரண்டாற்று முக்கு, இடைநிலை நீருந்து நிலையம் முதல் குமந்தாபுரம் வரையுள்ள நீரேற்று குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் மற்றும் வார்டு எண்.**1** முதல் **33** வரையுள்ள வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்கள், கல்லாறு, பெரிநாயகம் கோவில்,

இரண்டாற்று முக்கு தலைமைப் பணியிடம் ஆகிய பம்பிங் குழாய்களில் இணைக்கப்பட்டுள்ள சுலீஸ்வால்வு, ஏர் வால்வு, ஸ்கவர் வால்வு மற்றும் 13 மேல்நிலை தொட்டிகளிலுள்ள வால்வுகள் ஆகியவற்றில் ஏற்படும் நீர்க்கசிவுகளையும் மற்றும் வால்வு பழுதுகளையும் பழுது பார்க்க நகராட்சியில் போதிய வேலைப் பளு பணியாளர்கள் இல்லாத நிலையில் மேற்காணும் குடிநீர் பணிகளை உடனுக்குடன் மேற்க்கொள்ள இயலாத நிலை ஏற்படுகிறது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் ஒப்பந்ததாரர் மூலம் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளவும், அதற்கான ஒராண்டிற்குரிய உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேலும் மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்க் கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 5937/2021/இ1)**

**தீர்மான எண். 666**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 14**

இந்நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு.M.மாடசாமி ஒப்பந்தக்காரர் SBM திட்டம் 2018—19ன் கீழ் கீழ்காணும் விபரப்படி எடுத்த செய்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ.எண் | பணியின் பெயர் | பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | SBM திட்டம் 2018—19ன் கீழ் வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் பழைய உரக்கிடங்கில் பசுமை நுண்ணுயிர் உரக்குடில் மையம் அமைத்தல் பணி. | ரூ.2,00,000/— |
| 2. | SBM திட்டம் 2018—19ன் கீழ் வார்டு எண்.1 குமந்தாபுரம் பகுதியில் பசுமை நுண்ணுயிர் உரக்குடில் மையம் அமைத்தல் பணி. | ரூ.2,00,000/— |

மேற்காணும் விபரப்படி வ.எண்.1 முதல் 2 வரை உள்ள பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை ரூ.4,00,000/—யை இதுநாள் வரை திரு.M.மாடசாமி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத நிலையில் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செல்லப்பட்டமையால் அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5384 /2021/இ1)**

**தீர்மான எண். 667**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 15**

இந்நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வந்த திரு.K,ராமையா மூப்பனார் என்பவர் 2015—2016ம் ஆண்டு வார்டு எண்.22 இந்திரா நகர் புதுக்காலனி அன்னை நர்சரி பள்ளி வடக்கு பகுதிகளில் கழிவு நீரோடை அமைக்கும் பணிக்கு ஒப்பந்த பணி கிடைக்க பெறாததால் அப்பணிக்கு செலுத்தியுள்ள முன் வைப்புத்தொகை ரூ.5000/—யை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். அதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பதிவேட்டினை சரி பார்த்ததில் திரு.K,ராமையா மூப்பனார் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத நிலையில் அப்பணிக்கு செலுத்தியுள்ள

ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை ரூ.5000/– அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5071 /2021/இ1)**

**தீர்மான எண். 668**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 16**

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தென்காசி அவர்களின் கடித ந.க.எண்.ந8/5515/2021 நாள்.02.12.2021ல் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் – 2021க்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.891/2019/தே.பொ.அ.1, நாள்.09.11.2021 சுற்றறிக்கை எண்.C/142/2021ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளுக்குட்பட்டு கீழ்க்கண்ட விலை விகிதப்படி உள்ளூர் அச்சகங்களில் உரிய காலத்தில் அச்சடிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| SI,No | Activity | Minimum Rate | Maximum Rate |
|---|---|---|---|
| 1. | One side page Print out | Rs.0.18 | Rs.0.47 |
| 2. | Both side page Print out | Rs.0.37 | Rs.0.44 |
| | Including cost of 80 GSM Paper | | |

மேற்கண்ட விலைவிகிதப்படி 03.12.2021 அன்று வாக்காளர் பட்டியல் அச்சடித்து வழங்க கடையநல்லூர் நகராட்சிப் பகுதியிலுள்ள கீழ்கண்ட உள்ளூர் அச்சகத்தில் நேரடியாக விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்க்கண்ட விலை விகிதப்படி அச்சடித்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கிளாசிக் ஆட்செட் அன் கார்ட்ஸ்,<br>363, மெயின் பஜார்,<br>கடையநல்லூர்,<br>தென்காசி மாவட்டம். | பக்கம் 1க்கு ரூ.0.75/– |

மேலும் மேற்கண்ட விலை விகிதம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் விலை விகிதத்தினை விட கூடுதலாக இருப்பதால், கீழ்க்கண்ட அச்சகம் ஏற்கனவே 20.11.2021 அன்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய விலை விகிதப்படி அச்சடித்து வழங்க இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“ ஆல்பா கம்பியூட்டர்ஸ், 31/A15 வடக்கு ரதவீதி, சங்கரன் கோவில்”.**

எனவே உள்ளாட்சி தேர்தல் அவசரத்தை கருத்திற்கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் அடிப்படையில் மேற்கண்ட அச்சகத்திற்கு 03.12.2021 அன்று செயல்முறை ஆணை வழங்கி உள்ளாட்சி தேர்தலுக்கு கண்டறியப்பட்டுள்ள 82 வாக்குச்சாவடிகளின் வாக்காளர் பட்டியலினை தனித்தனி பக்கமாக 10 எண்ணம் **Double side Print** 90 எண்ணம் அச்சடித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும், மேற்கண்ட அச்சகத்திலிருந்து வாக்குச்சாவடி பட்டியல்கள் 100 எண்ணம் தேர்தல் ஆணைய விலை விகிதப்படி அச்சடித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அதற்குரிய உத்தேச செலவுத்தொகை ரூ.2.00/– இரண்டு இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1585 /2021/அ3)**

**தீர்மான எண். 669**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 17**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.5 கிருஷ்ணாபுரம் அரசு புறம்போக்கு பாட்டை நிலத்தில் புதிதாக நகர்புற சுகாதார மையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்காணும் நகர்புற சுகாதார மையத்தின் மேற்கூரையில் தளக்கல் பதிக்கப்படவில்லை. ஆகவே அவசர அவசியம் கருதி வார்டு

எண்.5 கிருஷ்ணாபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர்புற சுகாதார மையத்தின்மேற்கூரையில் தளக்கல்( Weathering Course) பதிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.400000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 6141/2021/இ1)**

**தீர்மான எண். 670**

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) S.ரவிச்சந்திரன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.